STC.No. 16-2025

நாள் 12.02.2026.

P.W.1 – (நாராயணசாமி )

எதிரி ஆஜரில்லை. இணையவழி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. புகார்தாரர் ஆஜர்.

எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சாட்சியிடம் 18.06.2021 தேதியிட்ட உறுதி மொழி பத்திரம் அசல் காட்டப்பட்டு அதில் உள்ள ஒன்றாவது சாட்சி கையொப்பம் அவருடையதா எனக் கேட்டக்கப்பட்டது சாட்சி ஆம் எனத் தெரிவித்தார். அது **எ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எ.சா.ஆ.1 புகார்தாரரின் தாயார் மாரியம்மாள் எதிரிக்கு எழுதிக் கொடுத்ததாக உள்ளது என்றால் சரி. எ.சா.ஆ.1 ஆவணத்தில் என் பெயரில் உள்ள ஆவணத்தை திரும்ப எழுதிக் கொடுக்க வேண்டும் என உள்ளது என்றால்ஆம். நான் திரும்ப எழுதிக் கொடுத்துவிட்டேன். எ.சா.ஆ.1 ஆவணத்தில் மாரியம்மாள் வசம் உள்ள கிரைய ஆவணம் நிரப்பப்படாத காசோலை மற்றும் மூலபத்திரங்கள் மற்றும் நிரப்பிய காசோலைகள் அனைத்தும் மாரியம்மாள் ஒப்படைக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. புகார்தாரரின் சகோதரர் மாரிச்சாமி என்றால் சரி. இந்த வழக்கு நிலுவையில் இருந்த சமயம் மாரிச்சாமியும் எதிரிக்கு ரூ.5 லட்சம் கொடுத்ததாக ஒரு சட்ட அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் எனக்கு தெரியாது.

புகார்தாரர் மற்றும் அவர் சகோதரர் ஒரே குடும்பமாக இருக்கிறார்கள் என்றால் சரி. என்னிடம் காட்டப்படும் காவல் துறை அழைப்பாணை எனக்கும் சார்பானது என்றால் சரி. அந்த காவல் துறை அழைப்பாணை வழக்கின் எதிரி கொடுத்த புகாரின் பேரில் அனுப்பப்பட்டது என்றால் சரி. எதிரி அந்த காவல் நிலைய புகாரில் அவருடைய பழைய காசோலைகள் மாரியம்மாளிடம் இருந்ததைக் கொண்டு புகார்தாரர் இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதாக அந்த புகாரில் சொல்லியுள்ளார் என்றால் சரி. அந்த புகார் மனு விசாரணைக்கு காவல் நிலையத்திற்கு நான், அபிமன்னன் கருப்பசாமி மற்றும் திருப்பதி வாத்தியார் ஆகியோர் சென்றிந்தோம் என்றால் சரி. மாரியம்மாளிடம் இருந்த காசோலைதான் வழக்கு காசோலை என்றால் காசோலை என்னென்ன காசோலை என்று எனக்கு குறிப்பாக தெரியாது. மாரியம்மாளிடம் எதிரி தங்கத்தின் காசோலை இருந்தது தெரியும். புகார்தாரர் தினேஷ்குமாருக்கும் எதிரி தங்கத்திற்கும் நேரடியாக வரவு செலவு கிடையாது என்றால் சரி. புகார்தாரரின் தகப்பனாரும் மற்றும் தாயாரும் எதிரியிடம் வியாபாரம் செய்தார்கள் என்றால் சரி.

புகார்தாரருக்கு அவருடைய தகப்பனார் திருப்பதி வாத்தியார் எதிரியுடன் வியாபாரம் செய்வது பிடிக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. என் நிருபண வாக்குமூலத்தில் சிவகாசியை சேர்ந்த வைரமுத்துவிடம் எதிரி கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியிருந்தார் என குறிப்பிட்டுள்ளது குறித்து நான் ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. வைரமுத்துவும் தங்கமும் பேசிக் கொண்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. புகார்தாரர் ஒரு ரூ.50 லட்சத்திற்கு காசோலை கொடுத்தாக நான் சொல்வது வைரமுத்துவிடம் தான் கொடுக்கப்பட்டது என்றால் சரி. அந்த பணமானது திருப்பதி வாத்தியார் பணம் என்றால் அவர்களின் குடும்ப பணம். காசோலைகள் புகார்தாரர் திணேஷ்குமார் மற்றும் அவரின் சகோதரர் மாரிச்சாமியின் காசோலைகள் என்றால் சரி. கிரைய ஆவணம் எழுதுவதற்கு முன் ஒப்பந்தம் எழுதுவது வழக்கம் என்றால் சரி. வைரமுத்து, எதிரி தங்கம் மற்றும் புகார்தாரர் திணேஷ்குமார் ஆகியோரிடையே கிரைய ஒப்பந்தம் இருந்ததாக ஆவணம் ஏதும்

S. Narayanasamy

தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புகார்தாரரின் குடும்பம் எனக்கு வேண்டிய குடும்பம் என்பதால் வைரமுத்துவிடம் எதிரி ஒப்பந்தம் செய்ததாகவும் எதிரிக்காக புகார்தாரர் மற்றும் அவரின் குடும்பத்தினர் வைரமுத்துவிற்கு பணம் கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வழக்கு காசோலையை தவிர எதிரியின் வேறு காசோலைகள், ஆவணங்கள் மற்றும் மூலபத்திரங்கள் புகார்தாரரின் தாயார் மாரியம்மாளிடம் இருக்கிறது என்றால் இருந்தது. குன்னூர் கிராமத்தில் கோவில் நகர் வீட்டு மனை பிரிவு பத்திரங்கள் புகார்தாரரின் குடும்பத்தினரிடம் இருக்கிறது என்றால் அந்த ஆவணம் முடிக்கும்போது நான் இல்லை, இருப்பினும் புகார்தாரர் குடும்பத்தினரிடம் ஆவணம் இருப்பது எனக்கு தெரியும். புகார்தாரர் பெற்றோருக்கும் எதிரிக்கும் நடைபெற்ற தொழில் சம்மந்தமாக வழங்கப்பட்ட பழைய காசோலையை கொண்டு எதிரியிடம் இருந்து பணம் பறிக்க வேண்டி புகார்தாரர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் தொழில் நடைபெறவில்லை என்றால் காசோலை தாக்கல் செய்வார்கள். வழக்கு காசோலை எதிரி புகார்தாரரின் பெற்றோரிடம் முந்தைய வியாபார சமயத்தில் கொடுத்திருந்த காசோலை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

மாரியம்மாளின் சகோதரி சுலோக்சனா என்றால் அவர் திருப்பதி வாத்தியாரின் சின்னம்மாள் ஆவார். நிலமோசடி பிரிவில் மாரியம்மாள் மற்றும் சுலோக்சனா ஆகியோருக்கு எதிராக ஒரு வழக்கு பதிவாகி உள்ளது என்றால் சரி. அந்த வழக்கு சமரசமாக பேசி முடிக்கப்பட்டது என்றால் முடியவில்லை. அந்த வழக்கு 2022ம் ஆண்டு காலகட்டத்தில் நடைபெற்றது. அந்த வழக்கிற்கு பின் புகார்தாரரின் குடும்பத்தாருக்கும் எதிரிக்கும் வியாபார தொடர்பு இல்லை என்றால் சரி. இந்த வழக்கு காசோலைக்கும் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் புகார்தாரரின் தாயார் வசம் இருந்த காசோலையை கொண்டு பணம் பறிக்கும் நோக்கில் புகார்தாரர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு அந்த விபரம் தெரியாது.

S. Narayanasamy

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டிய அதனால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

12/4/24

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.